வருகின்ற 2020-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31-ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 11.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திருமதி.S.M.பாரிஜான் பி.ஏ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. பவானி நகராட்சிக்குட்பட்ட அலுவலகம், தலைமை நீரேற்று நிலையம், பொதுக்கழிப்பிடங்கள் , நகராட்சிப்பள்ளிகள் ஆகியவற்றில் உள்ள மின்விளக்குகள், மின் விசிறிகள் பராமரிப்பு பணிகளுக்கு கீழ்கண்ட சாமான்கள் ரூ.12,000/- மதிப்பீட்டில் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. 4'x40w Tube Light - 75 nos
2. 40w Tube light electronic choke - 25 nos
3. 40 w Tube light Copper choke - 10 nos
4. Tube light Starter - 25 nos
5. 2.5 MFD Fan Condenser - 30 nos
6. Tube light side holder - 20 nos
7. Insulation tape roll - 20 nos
8. 3/20 VIR Copper wire ( 2.5sqm) - 2 coil
9. Silk Wire - 1 coil
10. 60w Bulb - 50 Nos
11. 7/20 Alumuniam wire - 1 coil

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1046/2020/சி1)

3. இந்நகராட்சியில் TURIP 2020-21 திட்டத்தின்கீழ் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் Restoration of BT road at Chokkarayan Kadu, Anna Nagar, Gurunathan street,Meenatchi kalyana mandapam road,Thiruvalluvar Nagar, Somasundrapuram, Devapuram and Kalthozhilalar 3rd street in ward No. 1,3,5,6,7,8, 11 &19 பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 9025/E3/ 2019 நாள்: 16.07.2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 18.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் Off Line -ல் மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்ற கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில் நுட்ப தகுதி வாய்ந்ததாக இருந்தது. அதன்அடிப்படையில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலை விகித பட்டியல் உரை 21.08.2020 அன்று வரப்பெற்ற ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டு மதிப்பீட்டுடன் ஒப்பு நோக்கியதில் கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ ( இலட்சத்தில்) | விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருவாளர். பெரியாண்டவர் கன்ஸ்ட்ரக்ஷன், பவானி. | 100.00 | 4.96% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |
| 2 | திருவாளர். ஸ்ரீரங்கநாதர் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பி.லிமிடெட், பவானி. | | 6.00% சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தைவிட அதிகம் |

மேற்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி தொகை, மதிப்பீட்டை விட 4.96% சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திருவாளர். பெரியாண்டவர் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களை விலை குறைப்பு செய்ய கேட்டு 21.08.2020 அன்று கடிதம் அனுப்பப்பட்டது.

ஒப்பந்ததாரர் திருவாளர்.பெரியாண்டவர் கன்ஸ்ட்ரக்ஷன், தற்போது உள்ள கட்டுமான பொருட்களின் விலைவாசி ஏற்றம் மற்றும் ஆட்கூலி உயர்வு காரணமாக விலை குறைக்க இயலாது என்றும் 18.08.2020 அன்று ஏற்கனவே அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் 4.96% சதவீதம் குறிப்பிட்டுள்ளதை குறைத்து தர இயலாது என 24.08.2020 அன்று ஒப்புதல் கடிதம் அளித்துள்ளார்கள். ஒப்பந்ததாரர் திருவாளர். பெரியாண்டவர் கன்ஸ்ட்ரக்ஷன், அவர்கள் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 4.96% சதவீதம் கூடுதலாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக, மதிப்பீட்டை விட 4.96% சதவீதம் அதிகமாக பணி செய்து கொடுக்க திருவாளர்.பெரியாண்டவர் கன்ஸ்ட்ரக்ஷன், அவர்கள் சம்மத கடிதம் கொடுத்துள்ளார்கள். மேற்கண்ட பணி திட்டப்பணியாக உள்ளதாலும் உரிய நேரத்தில் பணி முடிக்க வேண்டியுள்ளதாலும் மீண்டும் ஒப்பந்தப்புள்ளி கோருவதால் காலதாமதம் எற்படுவதாலும் மாநில உள்ளாட்சித்துறை பொறியாளர்கள் கையேடு பகுதி -1 பாகம் 2.7.2 ன்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.
2. மதிப்பீட்டிற்கு மேல் ஏற்படும் கூடுதல் செலவினத்தை 4.96 % சதவீதம் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.608 /2020/இ1)

4. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா தொற்று ஏற்படும் தெருக்களில் அப்பகுதியை தனிமைப்படுத்த சாலைகளின் குறுக்கே தடுப்பு அமைத்தல் மற்றும் பேனர் கட்டும்பணி, தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.154 நாள்: 31.07.2020-ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் 04.08.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வேலையின் விபரம் | திரு.எம்.எஸ். குருசாமி ஒப்பந்ததாரர் | திரு.எஸ்.பாலசுப்ரமணியன் ஒப்பந்ததாரர் | திருவாளர் ஸ்ரீராஜமுருகன் அசோசியேட்ஸ் |
|---|---|---|---|
| 1. சாலையின் குறுக்கே மூங்கில் துருவம் கொண்டும், G.I Sheet கொண்டும் தடுப்பு அமைத்தல் (உயரம் 5அடி, ஒருமாத வாடகைக்கு) | ரூ.160/RM | ரூ.150/RM | ரூ.170/RM |
| 2. கொரோனா விழிப்புணர்வு எழுதப்பட்ட flex sheet 3'x3' அளவு | ரூ.700/e | ரூ.600/e | ரூ.730/e |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2க்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.885/2020/இ1)

5. தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் (TURIP 2020-21) -ன் கீழ் சாலை மேம்பாடு செய்யும் சாலைகளில் உள்ள வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளில் ஏற்படும் பழுதுகளை பழுது பார்க்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 156, நாள்: 31.07.2020 அனுமதி அளித்துள்ளதின் பேரில் 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எஸ். பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர் | 0.40% மதிப்பீட்டு விகிதத்தை விடகுறைவு |
| 2 | திரு.P.A. செல்லப்பன் ஒப்பந்ததாரர் | 1.89% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட0.40% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.பாலசுப்ரமணியன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.857/2020/இ1)

6. பொறியியல் பிரிவு குடிநீர் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்கள் ஏற்பாடு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.80 இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 155, ெ நாள்: 31.07.2020 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 28.08.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம்/ குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம். அப்புசாமி ஒப்பந்ததாரர் | 0.23% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஆர்.என்.&கோ ஒப்பந்ததாரர் | 5.63% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு: வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.23% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.890/2020/இ1)

7. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் துப்புரவு பணிகளுக்கு தேவையான கருப்பு பினாயில், நீர்த்த சுண்ணாம்புதூள், வெள்ளை பினாயில், கிளினிங் ஆசிட் மற்றும் பிளிச்சிங் பவுடர் கிரேடு-2 போன்ற கிருமிநாசினிகள் கொள்முதல் செய்யும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு ஏற்கனவே நகர்மன்றம் அனுமதி வழங்கியுள்ளதன் பேரில் இப்பணிக்கு 30.06.2020-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளியாளரின் விபரம் | கிருமிநாசினி பெயர் | விலை விகிதம் ரூ. |
|---|---|---|---|
| 1 | M/s திரு. எஸ் பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 43 பழனிபுரம் 3வது வீதி, பவானி | 1)நீர்த்தசுண்ணாம்புதூள்<br>2)கருப்புபினாயில்<br>3)பிளீச்சிங்பவுடர்-கிரேடு<br>4)கிளினிங் ஆசிட்<br>5)வெள்ளைபினாயில் | 1)ரூ.12.00 (கிலோஒன்றுக்கு)<br>2)ரூ.62.00 (லிட்டர்ஒன்றுக்கு)<br>3)ரூ.62.00 (கிலோ ஒன்றுக்கு)<br>4)ரூ.23.00 (லிட்டர்ஒன்றுக்கு)<br>5)ரூ.52 (லிட்டர்ஒன்றுக்கு) |
| 2 | M/s எம்.எஸ்.பி.பெஸ்ட் கண்ரோல் சர்வீஸஸ், சேந்தன் கந்தன் காம்ப்ளக்ஸ், ஈரோடு மெயின்ரோடு, கோபி | 1)நீர்த்தசுண்ணாம்புதூள்<br>2)கருப்புபினாயில்<br>3)பிளீச்சிங்பவுடர்-கிரேடு<br>4)கிளினிங் ஆசிட்<br>5)வெள்ளைபினாயில் | 1)ரூ.11.00 (கிலோஒன்றுக்கு)<br>2)ரூ.59.50 (லிட்டர்ஒன்றுக்கு)<br>3)ரூ.59.00 (கிலோ ஒன்றுக்கு)<br>4)ரூ.22.00 (லிட்டர்ஒன்றுக்கு)<br>5)ரூ.50.15(லிட்டர்ஒன்றுக்கு) |

வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் கண்டுள்ள M/s எம்.எஸ்.பி.பெஸ்ட் கண்ரோல் சர்வீஸஸ், சேந்தன் கந்தன் காம்ப்ளக்ஸ், ஈரோடு மெயின்ரோடு, கோபி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் மற்றொன்றைவிட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்கலாம். 2020-2021-ஆம் நிதி ஆண்டில் தேவைக்கேற்ப M/s.எம்.எஸ்.பி.பெஸ்ட் கண்ரோல் சர்வீஸஸ், கோபி அவர்கள் சமர்பித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் அந்நிறுவனத்தில் கிருமி நாசினிகள் கொள்முதல் செய்து சுகாதார பணிகளுக்கு பயன்படுத்தி கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.282/2020/எச்1)

8. பொது சுகாதாரப் பிரிவு வாகனங்களான TN 36 AP 3151 மற்றும் TN 36 B 2655 வாகனங்களுக்கு முறையே 12 வோல்ட் 15 பிளேட் 80ஆர்ம்ஸ், 12 வோல்ட் 15 பிளேட் 100 ஆர்ம்ஸ், திறன் கொண்ட புதிய Exide பேட்டரி வாங்கும் பணிக்கு ஏற்கனவே நகர் மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதால் பேட்டரி விநியோகம் செய்யும் விருப்பமுள்ள நிறுவனங்களிடம் இருந்து 29.07.2020-ஆம் தேதி விலைப்புள்ளிகள் பெறப்பட்டது பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு:-

**1) TN 36 AP 3151 (12V 80 AH XP 800 (EXIDE EXPRESS BATTERY))** வாகனத்திற்கு வரப்பெற்ற விலைப்புள்ளியின் விபரம்:

| வ.எண். | விலைப்புள்ளியாளரின் விபரம் | விலைப்புள்ளி வழங்கிய விபரம் (பழைய பேட்டரியினை எடுத்துக்கொண்டு) |
|---|---|---|
| 1. | M/s ஸ்ரீ பகவதி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், 154 வர்ணபுரம் 4வது வீதி, மேட்டூர் மெயின் ரோடு, பவானி | ரூ. 7150/- |
| 2. | M/sஸ்ரீ பாரத் பேட்டரிஸ், 667, மேட்டூர் மெயின்ரோடு, பவானி | ரூ. 7300/- |
| 3. | M/s திரு.எஸ் பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 43 பழனிபுரம் 3வது வீதி, பவானி | ரூ. 7350/- |

**2) TN 36 B 2655 (12V 100 AH XP 800 (EXIDE EXPRESS BATTERY))** வாகனத்திற்கு வரப்பெற்ற விலைப்புள்ளியின் விபரம்:

| வ.எண். | விலைப்புள்ளியாளரின் விபரம் | விலைப்புள்ளி வழங்கிய விபரம் (பழைய பேட்டரியினை எடுத்துக்கொண்டு) |
|---|---|---|
| 1. | M/s திரு. எஸ் பாலசுப்ரமணியன், ஒப்பந்ததாரர், 43 பழனிபுரம் 3வது வீதி, பவானி | ரூ. 9450/- |
| 2. | M/s ஸ்ரீ பகவதி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ்,154 வர்ணபுரம் 4வது வீதி, மேட்டூர் மெயின் ரோடு,பவானி | ரூ. 9250/- |
| 3. | M/s ஸ்ரீ பாரத் பேட்டரிஸ், 667, மேட்டூர் மெயின்ரோடு, பவானி | ரூ. 9350/- |

**TN 36 AP 3151** வாகனத்திற்கு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 1லும், **TN 36 B 2655** வாகனத்திற்கு பெறப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண்: 2-லும் குறிப்பிட்டுள்ள M/s ஸ்ரீ பகவதி ஆட்டோ எலக்ட்ரிக்கல் ஒர்க்ஸ், 154 வர்ணபுரம் 4வது வீதி, மேட்டூர் மெயின் ரோடு, பவானி அவர்களின் விலைப்புள்ளிகளின் விலைவிகிதம் மற்ற இரண்டு நிறுவனங்களை விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்திடமிருந்து புதியதாக EXIDE பேட்டரி வாங்கி பொருத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.274/2020/எச்1)

9. நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26888/2018/UGSS-2 நாள்:16.07.2020-ல் மலகசடு சுத்திகரிப்பு நிலையம் கட்டமைப்பு ஏற்படுத்தாத நகர்புற உள்ளாட்சிகள் அருகில் உள்ள மாநகராட்சி /நகராட்சி / பேரூராட்சி கட்டி முடிக்கப்பட்ட / கட்டப்பட்டு வரும் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP)/ மலகசடு சுத்திகரிப்பு நிலையம் (FSTP) ஆகியவற்றினை கூட்டமாக பயன்படுத்தி கொள்ளும் வகையில் வழிகாட்டும் நெறிமுறைகள், புரிந்துணர்வு ஒப்பந்தம், தனியார் கழிவுநீர் அகற்றும் வாகனம் இயக்குனர்களுக்கு உரிமம் வழங்குதல் போன்றவற்றிற்கு ஒப்புதலளிக்கப்பட்ட ஆவணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

பவானி நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் , வணிக நிறுவனங்கள் மற்றும் பொது கழிப்பிடங்களின் மல தொட்டிகளில் ( Septic Tank) இருந்து எடுக்கப்படும் மல கசடுகளை ( Fecal Sludge) சுத்திகரிப்பு செய்ய தேவைப்படும் மல கசடு சுத்திகரிப்பு நிலையம்( FSTP) நிறுவப்படவில்லை. எனவே நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளபடி, பவானி நகரில் உள்ள வீடுகள், வணிக நிறுவனங்கள், மற்றும் பொது கழிப்பிடங்கள் ஆகியவற்றில் இருந்து எடுக்கப்படும் மல கசடுகளை சுத்திகரிப்பு செய்ய ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை பயன்படுத்தி கொள்ளும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொள்ளவும் மற்றும் இதர நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.917/2020/இ1)

10. பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் மருந்து தெளிப்பு பணிக்கு Knap-Sack Sprayer - 5 no's, Power Sprayer - 4 no's ஆகிய ஸ்பிரேயர்களும் மற்றும் முதிர்ந்த கொசுக்களை அழிக்கும் பணிக்கு Hand Thermal Fogging Machine - 4 எண்ணிக்கையும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி ஸ்பிரேயர்கள் மற்றும் Fogging Machine-களில் அவ்வபோது பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலை ஏற்படுகிறது.

இந்நிலையில் தற்போது கோவிட்-19 நோய் தடுப்பு நடவடிக்கைகளும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளும் தற்போது போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அனைத்து ஸ்பிரேயர்கள் மற்றும் Fogging Machine-களை இயக்குநிலையில் வைத்திருக்க வேண்டியது அத்தியாவசிமாகிறது. எனவே, ஸ்பிரேயர்கள் மற்றும் Fogging Machine- கள் பழுதுகள் செப்பணிடும் பணியில் நிபுணத்துவம் வாய்ந்த Growin Enterprises, No: 020/1, E.V.K. Sampath Salai, Erode - 638003 அவர்களின் நிறுவனத்தில் பழுதுகள் செப்பணிட்டு கொள்ளவும், Growin Enterprises No: 020/1, E.V.K. Sampath Salai, Erode - 638003 அவர்களின் விலைவிகிதத்தில் பழுதுகளை செப்பணிட்டு கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. 01.09.2020-ஆம் தேதி முதல் 31.03.2021-ஆம் தேதி முடிய அவ்வபோது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.50,000/-ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.360/2020/எச்1)

**இடம்: பவானி**

**நாள்: 31.08.2020**

**(ஒம்)திருமதி.S.M.பாரிஜான்**
**ஆணையாளர்/தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**